HMOP .No. 27/2024 நாள் : 15.04.2025

**PW1 குறுக்கு விசாரணை**

27.05.2011 அன்று திருமணம் நடந்தது என்றால் சரிதான். அதற்கு பின்னர் நான் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் வேலைக்கு அடிக்கடி சென்றுவிட்டதால் எனக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்பதற்காக வைத்தியம் நான் செய்து கொள்ளவில்லை என்றால் செய்து கொண்டேன். அதற்கான ஆதாரங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கையில் வைத்துள்ளேன். நான் வெளிநாட்டில் இருந்து சம்பாதித்து அனுப்பி வைத்த சொர்ப்ப பணத்தை கொண்டு எதிர்மனுதாரர் ஜீவனம் செய்து கொண்டும் நல்ல முறையில் வீட்டை கட்டினார் என்றால் இல்லை. நான் வந்து தான் வீட்டை கட்டினேன். நான் துபாய்க்கு வேலைக்கு சென்ற பின்னர் தான் வீடு கட்டப்பட்டது என்றால் இல்லை. அதன் பின்னர் நான் எனது மனைவிக்கு ஜீவனாம்சம் அனுப்பவில்லை என்றால் 2021க்கு பிறகு அனுப்பவில்லை. அதற்கு முன்பு அனுப்பினேன். நாகப்பட்டினம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என்னை போலீசார் அழைத்து பேசிய பிறகு நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. அதன் பின்னர் ஜீவனாம்சத்திற்கு வழி இல்லை என்பதால் தான் எதிர்மனுதாரர் அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் மற்றும் அவரது தங்கை நகையை வாங்கி அடமானம் வைத்து அந்த தொகையை நான் வெளிநாடு செலவிற்காகவும் எனது செலவிற்காகவும் வைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து கொடுக்கப்பட்ட நகை சீர்வரிசை சாமன்கள் ஆன கட்டில், பீரோ, இருசக்கர வாகனம் ஆகியவை எனது வீட்டில் தான் உள்ளது தான் என்றால் இல்லை, எதிர் மனுதாரர் எடுத்து சென்றுவிட்டார். நான் எதிர்மனுதாரர் தம்பியை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு ரூ. 2 இலட்சம் பணம் கொடுத்தாக கூறியுள்ளது வழக்கிற்காக அவ்வாறு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்

தங்கை நகையை நான் வாங்கி அடமானம் வைத்துவிட்டு அவருக்கு நான் திருமணம் செய்து வைத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தங்கை திருமணத்திற்கு நான் இரு சக்கரவாகனம் வாங்கி கொடுத்ததாக கூறுவதும், பொய் என்றால் சரியல்ல. எனக்கு குறையுள்ளதாக எதிர்மனுதாரர் கூறவில்லை என்றும், தற்போதும் எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழ தான் விருப்பப்படுகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் எந்தவித சுகபோக வாழ்க்கை வாழ வில்லை என்றும் அவர் கஷ்ட ஜீவனம் தான் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தை கொண்டு எதிர்மனுதார் தன்னுடைய ஜீவனத்தையும் செய்து கொண்டு நல்ல முறையில் ஆர்சிசி மாடிவீட்டை கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிர்மனுதார் அனுப்பிய பதில் அறிவிப்பில் என்னுடன் சேர்ந்து வாழதான் விருப்பப்படுகிறார் என்றால் அது தவறாகும். வழக்கிற்காக நான் எதிர்மனுதாரர் மீது குறைகளை கூறியிருந்தாலும் அவைகளை மன்னித்து எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு பணம் அனுப்பியதற்கான ஆதாரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இப்போதும் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.